**அரசுத் தேர்வுகள்இயக்ககம், சென்னை– 600 006**

**மேல்நிலை முதலாமாண்டு (+ Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் 2019**

**மறுமதிப்பீடு / மறுகூட்டல் தேர்வு முடிவுகள்வெளியிடுதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+ Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதி அதில் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் **scan.tndge.in** என்ற இணையதளத்தில் **27.05.2019** அன்று பிற்பகல் **2.00** மணிக்கு வெளியிடப்படவுள்ளது. இப்பட்டியலில் இல்லாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் வருகிற **27.05.2019** அன்று பிற்பகல் **2.00** மணி முதல் www.dge.tn.nic.in என்ற இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும், அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் தேதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**தேதி: 24 .05.2019**
**இடம்: சென்னை– 600 006.**